# மெட்ரோ ரயில் நிலயங்களில் மருத்துவ முகாம்

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும் உடல் நலம் மற்றும் உயிரியல் தொழில்துறையும் இணைந்து சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வரும் 8-ம் தேதி வடபழனி, செனாய் நகர், விமான நிலையம், ஆலந்தூர், அசோக் நகர் மற்றும் சென்ட்ரல் ஆகிய இடங்களில் இலவச மருத்துவ முகாம் நடத்துகின்றன.

காலை 9 முதல் 12 மணி வரையிலும், மாலை 4 முதல் இரவு 7 மணி வரையிலும் நடக்கும். இதில் உயரம் மற்றும் எடை (பி.எம்.ஐ), ரத்த அழுத்தம், சர்க்கரை உள்ளிட்டவைகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்.